**சாவகச்சேரி பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 27 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆற் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் சாவகச்சேரிபிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | எதிர்வருங்காலங்களில் நிதிக்கூற்றுக்களுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்படும். |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஆறு வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்குக்குக் கொண்டுவரப்பட்டிருக்காமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி கணக்குகளில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | ஆறு வாகனங்களின் பெறுமதிகளும் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | குறித்த வாகனங்களின் பெறுமதிகள் இந்தவருட நிதிக்கூற்றில் காட்டப்படும். |
| (ii) | பிரதேசசபைக்குச் சொந்தமான 15 காணி கட்டடங்களின் பெறுமதிகள் கணக்குக்குக் கொண்டுவரப்பட்டிருக்காமையினால் | 15 காணி கட்டடங்களின் பெறுமதிகளும் நிதிக்கூற்றுக்களில் | 15 காணி கட்டடங்களின் பெறுமதிகளைமதிப்பீடு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| சொத்துக்களின் பெறுமதி கணக்குகளில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | உள்ளடக்கப்பட வேண்டும். | | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. |

## 1.4 நிகழத்தக்க பொறுப்புக்கள்

2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சபையினால் ஒரு வெனித்தரப்பினருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன்,அது தொடர்பாக தகவல்கள் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரம் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வியாபார அனுமதியின்றி பொதுமண்டபம் நடாத்தியமை தொடர்பாக சபையினால் நீதிமன்றத்தில் 2018 யூலை 23 ஆம் திகதியிலிருந்து 24531 இலக்க வழக்கு இடம்பெற்று வருவது அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வழக்கிற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். | வழக்கு செலவுகள் வரவுசெலவுத்திட்டத்தில் நிகழத்தக்க பொறுப்பாக காட்டப்பட்டுள்ளது |

## 1.5 இணக்கமின்மைகள்

### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 158 (1) | ரூபா 427,070 பெறுமதியான ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு தவிசாளரினால் பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்க வில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019ம் ஆண்டில் நிலுவை அறவீடு செய்வதுடன் பற்றாணைச்சீட்டும் வழங்கப்படும். |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதி நிருவாக விதிகள் அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத்திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு வேறுபாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய விதிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வேறுபாட்டுக்கான விளக்கங்கள் உள்ளடக்கிய கூற்று இணைக்கப்படும். |

### 1.5.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% விற்பனை வரி அறவிடப்படவேண்டிய போதிலும், சபையினால் அவற்றினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% விற்பனை வரி அறவிடப்பட வேண்டும். | காணிப்பதிவாளரிடம் தொடர்பு கொள்வதனுடாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,663,917 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பானமுன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 55,767,504 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் ❖ | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் ❖ | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 106,000 | - | 24,731 | 484,156 | 106,000 | - | 86,145 | 611,440 |
| வாடகைகள் | 13,679,907 | - | 14,903,808 | 113,004 | 14,930,100 | - | 14,385,089 | 165,204 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 739,050 | - | 1,950,111 | 5,850 | 1,401,650 | - | 983,870 | 5,850 |
| ஏனைய வருமானம் | 74,467,943 | - | 71,580,661 | - | 66,515,337 | - | 87,051,146 | 6,445 |
| | **88,992,900** | **-** | **88,459,311** | **603,010** | **82,953,087** | **-** | **102,506,250** | **788,939** |

❖ பட்டியலிடப்பட்ட வருமானம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம்ரூபா 102,506,250 ஆக இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 88,459,311 ஆக குறைவடைந்துள்ளமையால் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 14,046,939 இனால் குறைவடைந்திருந்தது. எனினும் சபையானது வருமானத்தினை பட்டியலிட தவறியதனால் நிலுவையினை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | பட்டியலப்படுத்தப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்த வேண்டும். | ஆதனவரி வருமானம் பட்டியலிட நடவடிக்கை மேற்கெள்ளப்பட்டுள்ளது |

### 2.2.3 வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஆதனவரி நிலுவை ரூபா 337,581 பெறுமதியானது அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,882,717 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்தது. | நிலுவைகளை முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் முக்கிய 09 விடயங்களுக்கு உபவிதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | 30 முக்கிய விடயங்களுக்கும் உபவிதிகள் உருவாக்கப்படல் வேண்டும். | ஏனைய விடயங்களுக்கான உப விதிகள் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 06 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து செயற்பாடுகளிற்கும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நீண்ட காலம் மற்றும் குறுங்கால செயற்றிட்டங்களுக்கென மீளாய்வாண்டில் ரூபா 563,794 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் வருமானங்கள் எவையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருமானங்களை அதிகரிக்கவும் செலவினங்களைக் குறைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | குப்பைகளை இயற்கை பசளையாக்கி அகற்றுவதனால் சபைக்கு வருமானம் கிடைப்பதில்லை. |
| (ii) | திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு காலத்திற்கு காலம் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுகாதாரத் தொழிலாளர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் சீரான முறையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். | மருத்துவப் பரிசோதனை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிலையான வைப்பில் உள்ள நிதி ரூபா 76,855,377 ஆனது அபிவிருத்தித் திட்ட வேலைகளினை நடைமுறைப்படுத்த பயன்படுத்தப்படாது வங்கியில் வட்டி வருமானம் உழைக்கும் நோக்குடன் வைப்பிலிடப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்குரிய வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் நிலையான வைப்பிற்கான வட்டி சபை வருமானமாகப் பயன்படுத்தப்படுகின்றது. |
| (ஆ) | பிரதேச சபையில் அனுமதி பெறப்படாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்த 08 தொலைத்தொடர்புக் கோபுரங்களுக்கான வியாபார உரிமக்கட்டணம் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அனுமதி பெறப்பட்டு உரிமக்கட்டணம் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வியாபார உரிமக்கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. |
| (இ) | கடந்த 10 வருடங்களுக்கு மேலாக சபையினால் ஆதனவரி அறவீட்டுக்காக ஆதனங்களுக்கு மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களுக்கு மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | மீள்மதிப்பீட்டிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. |
| (ஈ) | பிரதேச சபையானது பொதுமக்கள் சேவை பட்டயத்தினை காட்சிப்படுத்தியுள்ள போதும் அதில் குறிப்பிடப்பட்டதற்கு முரணாக மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் காலம் தாழ்த்தியே வழங்கப்பட்டிருந்தன. | மக்களுக்கு உரிய காலத்தில் சேவைகள் வழங்கப்பட வேண்டும். | பொதுமக்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் குறைபாடுகள் காணப்படும் சந்தர்ப்பத்திலேயே் காலதாமதம் ஏற்படுகின்றது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 16 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு சமனான பதவியினர் நியமிக்கப்பட வேண்டும். | பதவி வெற்றிடங்கள் இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| சோலைவரி அறவிடுவதற்காக வருடாந்தம் சபையினால் ஆதன உரிமையாளர்களுக்கு K படிவம் வழங்கப்பட வேண்டும். எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2018 ஆம் ஆண்டில் சபையிலுள்ள ஆதனங்களுக்கு K படிவம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | K படிவம் உரிய காலத்தில் விநியோகிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 03 வாகனங்கள் சபையின் பெயருக்கு நாளதுவரை உரிமை மாற்றப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையை மாற்ற வேண்டும். | 3 வாகனங்களுக்கும் உரிமை மாற்றம் செய்வதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

### 3.5.2 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் 03 வாகனங்கள் சபையினால் உரிய தேவைகளுக்கு 2 தொடக்கம் 9 வருடங்கள் பயன்படுத்தப்படாதிருந்தது. | வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பாவிக்கமுடியாத நிலையில் உள்ள வாகனம் ஏல விற்பனைசெய்வதற்கும் ஏனைய வாகனங்கள் திருததுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் பாதீட்டு மீண்டுவரும் செலவினங்களையும் உண்மையான மீண்டுவரும் செலவினங்களையும் ஒப்பிடும் போது ரூபா 16,661,025 இனால் சாதகமாகக் காணப்படுகிறது. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | சபையின் பாதீட்டின் மீண்டுவரும் செலவுகளான பயணச்செலவு, மூலதனச் சொத்துக்களை பழுதுபார்த்தல், மானியமும் உதவுதொகைகளும், ஓய்வூதியங்கள் என்பவை உண்மையான செலவிலிருந்து கூடுதலான வீதமானது சேமிப்பாகக் காணப்பட்டிருந்தது. இதனால் ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்பட்டது. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | குறிப்பிட்ட செலவினங்கள் கடந்த ஆண்டை விட இவ்வாண்டில் எதிர்பாராதளவில் குறைவடைந்தமையால் இச்சேமிப்பு ஏற்பட்டது. |